தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-9-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலை சர்வதேச கல்வி உதவித்தொகை பெற்றுள்ளனர்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் உயிர்த்தகவலியல் இளநிலை பட்டப்படிப்புகளை வருகிறது. இந்தப் பட்டயப்படிப்புக்களை படித்த மாணவர்கள் அயல்நாடுகளில் தங்களது மேற்படிப்பைத் தொடர சர்வதேச கல்வி உதவித்தொகைகளைப் பெற்றுள்ளனர்.

செல்வி. கே. நிவேதா, (பி.டெக். உயிர் தொழில்நுட்பவியல்) என்ற மாணவி UPSC-Miem என்ற ஸ்காலர்ஷிப் மூலம் பிரான்சில் உள்ள பாரிஸ் டெஸ்கார்ட்டஸ் பல்கலைக்கழகத்தில் தனது முதுநிலை பட்டப்படிப்பை பயோமெடிக்கல் இன்ஜினியரிங் என்ற துறையில் தொடர உள்ளார்.

செல்வன். அ. ராகவேந்திரன், (பி.டெக். உயிர் தொழில்நுட்பவியல்) என்ற மாணவர், அதே துறையில் தனது முதுநிலை பட்டப்படிப்பை தென்கொரியாவிலுள்ள க்யூங்ஹீ பல்கலைக்கழகத்தில் தொடர உள்ளார். இவர் கல்வி உதவித் தொகையாக ஒரு மாதத்துக்கு 450 அமெரிக்க டாலர்களைப் பெறுவார். இதர செலவுகளை கொரியாா பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்ளும்.

செல்வன். காட்வின் (பி.டெக். உயிர் தொழில்நுட்பவியல்), தனது முதுநிலைப் பட்டப்படிப்பினை இஸ்ரேலிலுள்ள பென்-குரியன் பல்கலைக்கழகத்தில் உயிர் தொழில்நுட்பவியல் மூலம் மானாவாரி விவசாய மேம்பாடு என்ற துறையில் பயில உள்ளார். இவர் ஒரு மாதத்திற்கு 685 அமெரிக்க டாலர்களை கல்வி உதவித் தொகையாக பெறுவார். இதர செலவுகளை இஸ்ரேல் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்ளும்.

மேலும், உயிர்த் தொழில்நுட்பவியல் பயின்ற ப. அபிராமி, ஜி. உத்ரா மற்றும் வைஷ்ணவி சேகர் (உயிர் தொழில்நுட்பவியல்) மாணவிகள் தங்கள் மேற்படிப்பினைத் தொடர சுவீடனிலுள்ள லுண்ட் பல்கலைக்கழகத்தில் இடங்களைப் பெற்றுள்ளனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்